# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண் – 9

# அறிவிப்புகள்
# 2020–2021


## சீ. வளர்மதி

பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# அறிவிப்புகள்

# 2020–2021

## 1. விடுதிகளுக்கு மின் அரைப்பான்கள் (Mixer grinder) வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1301 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு மின்அரைப்பான்கள் (Mixer grinder) 84 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 2. விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்/ காப்பாளினிகளுக்கு பயிற்சி வழங்குதல்

விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்/ காப்பாளினிகள் தங்கள் விடுதியை சிறந்த முறையில் பராமரிக்கவும், ஆளுமை திறனை மேம்படுத்திடவும் **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அண்ணா மேலாண்மை நிலையம் மூலமாக **3** நாட்கள் பணியிடைப் பயிற்சி **38** இலட்சத்து **22** ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 3. விடுதி துப்புரவு பணியாளர்களுக்கு சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல்

**மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தனிப்பட்ட கையுறை (Gloves), முகமூடி (Mask), மற்றும் பாதுகாப்பு காலுறை (Shoes) ஆகியவை **15** இலட்சத்து **60** ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 4. விடுதிக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவியரின் எண்ணிக்கை உயர்த்துதல்

ஈரோடு மாவட்டம், கொடுமுடியில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதிக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவியர் எண்ணிக்கை 50 லிருந்து 100 ஆக **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, 4 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தப்படும்.

## 5. விடுதிகளுக்கு குளிர்விப்பான் உடன் கூடிய குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் வழங்குதல்

முதற்கட்டமாக 200 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** குளிர்விப்பான் உடன் கூடிய குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் 2 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 6. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு மேசைகள் மற்றும் பெஞ்ச்கள் வழங்குதல்

இத்துறையின் கீழ் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி மேம்பாட்டிற்காக 82 கள்ளர் சீரமைப்பு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** தேவை உள்ள அரசு கள்ளர் சீரமைப்பு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நான்கு மாணவர்கள் அமரக்கூடிய நவீன மேசை மற்றும் பெஞ்ச்கள் 1 கோடியே 37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 7. கள்ளர் சீரமைப்புப் பள்ளி கட்டடங்களில் சாய்தளவசதி ஏற்படுத்துதல்

இத்துறையின் கீழ் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி மேம்பாட்டிற்காக 295 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளி கட்டடங்களில் சாய்தளவசதி (Ramp facility) இல்லாத 199 கட்டடங்களில் **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2 கோடியே 40 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய் செலவில் சாய்தள வசதி அமைத்து தரப்படும்.

## 8. 25 விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 25 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு 3 கோடி ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டித் தரப்படும்.

## 9. கள்ளர் சீரமைப்பு அலுவலகம் மற்றும் 60 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒருங்கிணைந்த நிதி மேலாண்மை திட்டத்தினை (IFHRMS) கள்ளர் சீரமைப்பு அலுவலகம் மற்றும் 60 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்திட, கணினிகள், அச்சுப்பொறி, மின்னூக்கி மற்றும் நகல் எடுக்கும் இயந்திரகள் ஆகியன 96 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 10. “சிறுபான்மையினர் உரிமை நாள்” விழா கொண்டாட வழங்கப்படும் நிதியினை உயர்த்தி வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, “சிறுபான்மையினர் உரிமை நாள்” அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாட வழங்கப்படும் தொகை 2,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தப்படும். மேலும் சிறுபான்மையினர் இயக்குநகரத்தில் இவ்விழாவை கொண்டாடுதவற்கு 1 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். இதற்காக 4 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 11. மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் அலுவலகத்தை நவீனப் படுத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு **முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் அலுவலகத்தில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல், கணினிகள், மரச்சாமான்கள், குளிர்சாதன கருவிகள் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு நவீனப்படுத்த **45** இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 12. 425 விடுதிகளுக்கு கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) வழங்குதல்

கண்காணிப்பு கேமராக்கள் வழங்கப்பட வேண்டிய 4 மாணவியர் விடுதிகள் மற்றும் முதற்கட்டமாக 421 மாணவர் விடுதிகள் என மொத்தம் 425 விடுதிகளில் **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 4 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்படும்.

## 13. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு தனித்திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி அளித்தல்

இத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 255 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** **6** கோடியே **42** இலட்சத்து **96** ஆயிரம் ரூபாய் மதிப்பிலான தனித்திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி திறன் மேம்பாட்டு கழகம் மூலம் அளிக்கப்படும்.

## 14. 25 கள்ளர் சீரமைப்புப் தொடக்கப் பள்ளிகளில் மழலையர் (LKG) வகுப்புகள் மற்றும் 25 கள்ளர் சீரமைப்புப் மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் ஆங்கிலவழிக் கல்வி தொடங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 25 அரசு கள்ளர் சீரமைப்பு தொடக்கப் பள்ளிகளில் ஆங்கில வழியிலான மழலையர் (LKG) வகுப்புகள் மற்றும் 25 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் ஆங்கிலவழிக் கல்வி வகுப்புகள் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

## 15. கபர்தஸ்தான் மற்றும் அடக்கஸ்தலம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்துவர்களின் கோரிக்கையினை கருத்தில் கொண்டு கபர்தஸ்தான் மற்றும் அடக்கஸ்தலம் அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்த 1 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 16. விடுதிகளில் பணிபுரியம் பகுதிநேர துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு கால முறை ஊதியம் வழங்குதல்

விடுதிகளில் 3 ஆண்டுகளுக்கு மேல் 3000 ரூபாய் தொகுப்பு ஊதியத்தில் பணிபுரியும் பகுதிநேர துப்புரவு பணியாளர்களுக்கு **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சிறப்பு கால முறை ஊதியம் (திருத்தியமைக்கப்பட்ட நிலை–2, குறைந்த பட்சம் ரூ.4000, அதிக பட்சம் ரூ.12,500) வழங்கப்படும். இதனால் விடுதிகளில் பணிபுரியும் 718 பகுதிநேர துப்புரவு பணியாளர்கள் பயன்பெறுவர். இதற்காக 2 கோடியே 32 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**சீ. வளர்மதி**

பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்